நிர்வாகசேவையில் மாற்றங்கள் செய்ய பீலிக்ஸ் திட்டம்

Registered as a News Paper in Ceylon

விலை சதம் 15 ★★★

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

செல்லர் கோர்ப்பரேஷன்

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 178
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 23 ஜமா. ஆகி 5 சனிக்கிழமை [8-8-70]

சிற்றி & கில்ட் ஒவ் லண்டன்
எலெக்றிகல் இன்ஜினியரிங்
PRELIMINARY COURSE

மே மாதம் 1971-ம் ஆண்டு நடை பெறவிருக்கும் பரீட்சைக்கு அனுபவமிக்க மின்சார இன்ஜினியர்கள் போதனையளிப்பார்கள்.

மாலைநேர, பகல்நேர போதனைகள் இரண்டும் உண்டு.

பதிவாளர்:
உயர்கலைக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

2397

கோட்டை, வெள்ளி

தேசிய வளர்ச்சிக்காக அரசாங்க ஊழியர்களின் திறமைகள், தகுதிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சில மாற்றங்களை செய்வதற்கு பொதுநிர்வாகம் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்.

நாட்டின் பொதுநிர்வாகத்தைச் சீர் செய்வதற்கான ஒரு திட்டத்தை திரு. பண்டாரநாயக்கா விரைவில் மந்திரி சபைமுன் சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

நிர்வாகசேவைக்கு ஊழியர்கள் தெரிவு செய்வதற்கு இப்பொழுது நடத்தப்படும் சோதனைகளை நிறுத்திவிடவும் அமைச்சர் முடிவுசெய்திருப்பதாகத் தெரிகின்றது.

வடபகுதியில்

சிங்கள ஊழியர்கள் பயப்படுகிறார்களாம்

கோட்டை, வெள்ளி

வடபகுதியில் அரசாங்கக் காரியாலயங்களில் இடம் பெறுவதாகக் கூறப்படும் ஊழல்களைக் காட்டிக்கொடுக்கும் சிங்கள ஊழியர்களுக்கு சிங்களவர் அல்லாத சில உயர்தர அதிகாரிகளால் இடைஞ்சல்கள் ஏற்படுவதாகவும் இதனால் இவர்களால் சேவைசெய்ய இயலாமல் இருக்கிறதென்றும் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். இத்தகவலை 'தவஸ' பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது.

தொழில்கள் புரிவதற்காக சிங்கள ஊர்களிலிருந்து வடபகுதிகளுக்கு வந்துள்ளசிங்களவர்கள் பயமுறுத்தல்களு இடைஞ்சல்களுக்கும் ஏளனங்களுக்கும் உட்படுத்தப்படுவதினால் அவர்களில் அனேகர்தம் தொழில்களை கைவிட்டு தமது ஊர்களுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் மேற்படி ஊழியர்கள் தெரிவித்திருக்கிறார்களாம்.

வடபகுதியிலுள்ள ஒரு ஆஸ்பத்திரி ஊழியர் பிரதம மந்திரிக்கும், சுகாதார அமைச்சர் திரு ஹேமா பஸ்நாயக்கா கியு ஸி ஆகியவர்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் இந்த வியங்களை விளக்கியுள்ளனராம்.

அரசியல் சட்ட திருத்த மசோதா செனட்டில் தோல்வியடைந்தது!

சிறிமா அரசு பதவிக்கு வந்தபின் ஏற்பட்டுள்ள முதல்முட்டுக்கட்டை

கொழும்பு, வெள்ளி

இலங்கை அரசியல்சட்ட திருத்த மசோதா இன்று செனட்சபையில் தோல்வியடைந்தது.

ஆட்சிமன்ற உறுப்பினர் சம்பந்தமான அரசியல் சட்டத்தின் 13வது ஷரத்தைத் திருத்துவதற்காக அரசாங்கம் கொண்டுவந்த இந்த மசோதாவை எதிர்க்கட்சிசெனட்டர்கள் எதிர்த்து வாக்களித்து அரசாங்கத்துக்குத் தோல்வி ஏற்படுத்தினர்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான இந்த மசோதா ஏற்கனவே மக்கள் பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேறியுள்ளது. இம் மசோதாமீது செனட்சபை கடந்த ... விவாதித்த பின் ... வாக்கெடுப்பு நடைபெற்

திருச்செல்வம். நடேசன், கே. எம். பி. ராஜரத்தினு, விஜயமானே, சோமரத்ன அமரதுங்க, கிச்சிலான், அப்புகாமி, சமரவீரமா ஆகியவர்கள் எதிர்த்துவாக் களித்தவர்களில் சிலர். செனட்டர் நீதிராஜா, செனட்டர் ... தாசன் ஆகியவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

திகாரத்துக்கு நாம் பணிய முடியாது. சில மந்திரிகள்பயமுறுத்தும் வகையில் பேசியுள்ளார்கள் இதற்காக நீதியை நாம் அசட்டைசெய்ய முடியாது என்றார். குற்றஞ் செய்தஒருவருக்கு மன்னிப்பு கொடுக்கும் அதிகாரம் கவர்னர்ஜெனரலுக்கு இருக்கையில் இந்தச்சட்டம் அவசிய

வெள்ளம்போல் பக்தர் கூட்டம்
'அரோகரா', 'முருகா' என்று பரவசத்துடன் ஓசையிட

நல்லைக்கந்தன் கோயிலில் கொடியேறியது

யாழ்ப்பாணம், சனி

பக்தர்கள் வெள்ளம் போல் ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டு நின்று 'அரோகரா' 'முருகா' என்று கோஷமிட சரியாக நண்பகல் 12 மணிக்கு நல்லைக்கந்தன் ஆலயத்தில் கொடியேறியது.

அடியார்கள் வசதியாக நின்று சுவாமிதரிசனம் செய்யக் கூடியதாக உள் வீதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ள போதிலும் பெருந் தொகையாக மக்கள் கொடியேற்ற உற்சவத்தைக் கண்டுகளிக்க வந்திருந்ததால் ஜனநெரிசலில் பெண்கள் சிலர் மயக்கமடைந்தனர்

நல்லூர்த் திருவிழா ஆரம்பமாகியுள்ளதென்பதை யாழ்ப்பாண வீதிகளில் நேற்று அதிகாலை முதலே அர்ச்சனைத் தட்டுக்களுடன் மக்கள் சாரி சாரியாக நல்லூரை நோக்கிச் சென்றதிலிருந்து தெரியக் கூடியதாக இருந்தது

பூகோடையில்

துணி ஆலை

கோட்டை, வெள்ளி

பூசேடையில் துணிஆலை நிறுவப்பட இருக்கிறது. 63 ஏக்கர் விஸ்தீரணத்தில் கட்டப்படவிருக்கும் இவ் ஆலைக்கு சீனு 4 கோடி ரூபா நன்கொடையளிக்க முன் வந்துள்ளது.

1958-ல் இலங்கைஅரசாங்கம் சீனுவோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படியே இவ்வளவு தொகையைக் கொடுக்க சம்மதித்துள்ளது.

41,000 நூல் சுற்றும் கதிர்களும், 700 நெசவு தறிகளும் கொண்டமின்தறி கைத்தறி ஆலையாக இது விளங்கும் மேலும் 26 ஏக்கர் நிலத்தை வாங்கி இவ் ஆலையில் வேலைபார்க்கவிருக்கும் ஊழியர்களுக்கு வீடமைத்துக்கொடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறையில்

ரூபா 2 லட்சம் செலவில் நவீன மார்க்கட்

புலோலி, வெள்ளி

பருத்தித்துறை சந்தை மிகவிரைவில் உள்ளூராட்சி அமைச்சினுல் திருத்தி அமைக்கப்படவிருக்கிறது இதற்கென ஒரு லட்சத்து நாற்பதினுயிரம் ரூபாவை உள்ளூராட்சி அமைச்சு ஒதுக்கியுள்ளது இதற்கான ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது.

நவீன முறையில் இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் 'மார்க்கட்' மாதிரிப் படத்தையும், இடத்தையும் தெரியப்படுத்துமாறு உள்ளூராட்சி அமைச்சு பருத்தித்துறை நகரசபையிடம் கேட்டிருக்கிறது.

ஆங்கிலத்தில் எழுதியதற்காக விசாரணை

யாழ்ப்பாணம், சனி

இரு வியாபாரிகள் மீது வழக்கு

கோட்டை, வெள்ளி

கட்டுப்பாட்டு விலைக்கு ...

காவிரி பங்கீடு பிரச்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிரி பங்கீடு பிரச்னை

மத்தியஸ்தத்துக்குப் போக கேரள அரசு விருப்பம்

சென்னை, ஆக. 7 தமிழ்நாட்டு அரசுக்கும் மைசூர் அரசுக்குமிடையில் கடந்த 20 ஆண்டுகளாக அமுலில் இருந்துவரும் ஒப்பந்தத்தை மீறும் செயல் இதுவென்று தமிழ்நாடு அரசு ஆட்சேபம் தெரிவித்தது. இந்த அணைகள் கட்டுவதை உடன் நிறுத்தும்படி மத்திய அரசுவிடுத்த கோரிக்கையையும் மைசூர் அரசுபுறக்கணித்தது. அதன் பின் காவிரி ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்ளும் தமிழ் நாடு, கேரளம், மைசூர் ஆகிய மூன்று மாநில அரசுகளின் முதலமைச்சர்களே யும் ஒரு மதாநாட்டில் சந்திக்கச்செய்து ஒரு முடிவு ஏற்படுத்த மத்திய நீர்ப் பாசன அமைச்சர் திரு. கே எல் ராவ் முயற்சிசெய் தார். ஆனால் அதனலும் பயனேற்படாமல் போய் விட்டது.

காவிரி ஆற்றின் தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக தமிழ் நாடு அரசுக்கும் மைசூர் அரசுக்கும் தகராறு ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

காவிரி ஆற்றில் மைசூர் அரசு இரண்டுபெரிய அணைகளைக் கட்டிவருகின்றது

22 வருடங்களாகியும் மறையவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

எமது நாட்டில் அரசாங்க உத்தியோகத்திலே மோகம் ஏற்பட்டிருக்கிறது. அன்னிய நாட்டவர்களினுலே புகுத்தப்பட்ட இந்த அரசாங்க உத்தியோக ஆசை சுதந்திரமடைந்து இருபத்திரண்டு ஆண்டுகளாகியும் எம்மை விட்டுப்போனபாடில்லை' என சுன்னுகம் ஸ்கந்தா உயர் வகுப்பு மாணவர்களினல் நடாத்தப்பட்ட இராப் போசன தேநீர் விருந்துபசாரத்திற்குப் பதிலளித்துப் பேசிய சிங்கர் ஸ்தாபன அதிபர் திரு. ஜே எம் இராசரத்தினம் கூறினர்

இப்படி முது இந்தத் தகராறை மத்தியஸ்தர் தீர்த்துவிடவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவ தாதியுடன் அப்புலன்ஸ் சாரதி கைது

முல்லைத்தீவு, வெள்ளி

வைத்திய அதிகாரியின் அனுமதியின்றி அப்புலன்ஸ் வண்டியை எடுத்துச் சென்ததாகக் கூறப்படும் அம்புலன்ஸ் சாரதியை வவுனியாவில்வைத்துப் பொலிசார் கைதுசெய்தனர். முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி. முல்லைத்தீவுப் பொலிசில் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து அம்புலன்ஸையும், சாரதியையும் வவுனியாப் பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

வவுனியாவில் அம்புலன்ஸ் வண்டியைச் சோதனையிட்டபோது, வண்டியினுள் இதே ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் மருத்துவத் தாதி ஒருவரும் காணப்பட்டாராம். முல்லைத்தீவுப் பொலிசாரிடம் சாரதியும், குறிப்பிட்ட பெண்ணும் ஒப்படைக்கப்படு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மலேரியா அதிகரிப்பு; தடுப்பு நடவடிக்கை தீவிரம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

மலேரியாத் தடை சம்பந்தமாக வீடுகளுக்கு விஜயம் செய்யும் சுகாதார ஊழியர்கள் ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும் மாதந்தோறும் ரத்தம் பெற்றுப் பரிசோதனை செய்துவருகின்றனர். சில வீடுகளில் நோய் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்குச் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.

மலேரியா நோய் தடுப்பு அதிகாரிகள் வடபகுதியிலுள்ள பாடசாலைகளுக்கும் சென்று தடுப்பு ஊசி ஏற்றிவருகின்றனர். கடந்த சில மாதமாக ஒருவித காய்ச்சல் நோய் யாழ்ப்பாணப் பகுதியில் பரவிவருவதாக வைத்திய அறிக்கை கூறுகிறது

மூன்று புதிய வாகனங்கள்

புலோலி, வெள்ளி

பருத்தித்துறை நகரசபை ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபா செலவில் மூன்று வாகனங்களை கொள்வனவு செய்யவிருக்கிறது. கற்பொழுது நகரசபையின் பாவிப்பிலிருக்கும் வாகனங்கள் பழுதடைந்துள்ளதால் புதிய வாகனங்கள் வாங்கப் படவிருக்கின்றன.

திருமதி குமாரசூரியர் பரிசில்களை வழங்கினர். நாடகப் போட்டியில் வள்ளுவர் இல்லத்தின் 'வள்ளுவர் வந்தார்' என்ற நாடகம் முதலிடம் பெற்றது.

வழக்கை ஆற்றுத் திட்டம்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் வழுக்கை ஆற்றுத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான பூர்வாங்க வேலைகள் அரசாங்கத்தினுல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பலாலியில் இருந்து அராலிவரையிலுமுள்ள இருபது மைல் பிரதேசத்திலுள்ள கால்வாய்கள், குளங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதல் கட்ட வேலையாக நில அளவை வேலைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சித்திர ஆசிரியர் பதவிகள்

கோட்டை, வெள்ளி

சித்திர ஆசிரியர்களுக்கு பதவிகள் ஏற்படுத்திக் கொடுப்பதுபற்றிகல்வியமைச்சர் ஆலோசித்து வருகிறார் இதுசம்பந்தமாகசித்திர ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் என்று தெரிகின்றது.

ஆங்கிலத்தில் எழுதியதற்காக விசாரணை

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியைச் சேர்ந்த ஓர் தமிழ் காரியாதிகாரி அரசகடும மொழித்திணைக்களத்திற்கு அனுப்பிய கடிதஉறையில் எல்லாவற்றையும் சிங்களத்தில் எழுதிவிட்டு பதிவு என்பதை மட்டும் ஆங்கிலத்தில் முத்திரையிட்டு அனுப்பிஞரம்.

இதன் காரணமாய் அரசகரும மொழித்திணைக்களம் சம்பந்தப்பட்டவர் ஏன் ஏதனைச் சிங்களத்தில் எழுதாமல் ஆங்கிலத்தில் எழுதினர் என்பதை விசாரணை செய்யுமறு யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளதாம்! (கு.வி.ம.)

மாவுக் கப்பல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்துத்துறை துறை முகத்தில் ஒரு லட்சத்து எண்பது ஆயிரம் மூடை

இரு வியாபாரிகள் மீது வழக்கு

கோட்டை, வெள்ளி

கட்டுப்பாட்டு விலைக்கு கூடுதலாக துணிகளை விற்பனை செய்ததாக இரு வியாபாரிகள் மீது லங்கா சலாலஸ்தாபனம் வழக்குத் தொடர்வதற்கு முடிவு செய்திருக்கின்றது.

ஏற்கனவே இந்தவியாபாரிகளின் துணிவிற்பனைக்கான பதிவுகள் தற்காலிகமாக ரத்துசெய்யப்பட்டுள்ளன.

நல்லூர், வெள்ளி

35 லட்சம் ரூபா செலவில் தெல்லிப்பளையில் அமைக்கப்பட்டு வரும் ஆஸ்பத்திரியின் வேலைகள் செப்டம்பர் மாதத்தில் பூர்த்தியடைந்து விடுமென்று சுகாதாரப் பகுதி அறிவித்துள்ளது.

கள் கொண்ட மா கப்பல் ஒன்று வந்துள்ளது அதிலிருந்து இறக்குமதி வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

'தமிழ் மக்களுக்கு அரசு துரோகம் செய்யாது'

முத்தமிழ் விழாவில் விளையாட்டு அமைச்சர்

வெள்ளவத்தை, வெள்ளி

நான் இல்லாத வேளைகளில் அநுராதபுரத்தில் என் மனைவியார் எனக்காகக் கடமையாற்ற வேண்டியிருப்பதால் உங்களது அழைப்பை ஏற்று எனது மனைவியாரும் இவ்விழாவில் கலந்து கொள்ளமுடியவில்லை. தமிழ் மக்கள் நிரம்பியுள்ள இக் கூட்டத்தில் தமிழில் பேசுவதற்கு எனக்கு நல்ல விருப்பம். இந்தநாட்டில் இன, மத, மொழி பேதமின்றிச் சகல மக்களும் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதான் எமது ஆசை புதிய அரசாங்கம் தமிழ் மக்களை விரும்பவில்லை தமிழ் மக்களைவிரும்பவில்லை. அது தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யும் என்ற தப்பான அபிப்பிராயம் தற்போது நிலவிவருகிறது எமது அரசாங்கத்திடம் அப்படியான கருத்து ஒருநி போதும் இல்லை என்பதைச் சொல்லிவைக்க விரும்புகிறேன்''

''இவ்வாறு பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி இரத்தினயக்கா கொழும்பு இந்து கனிட்ட பாடசாலையின் முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு இரத்தினயக்கா தொடர்ந்து பேசியதாவது:

எமது அரசாங்கம் இன, மத பேதமற்றவகையில் சகல மக்களையும் வழிநடத்திச்செல்வதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பை நாடுகிறது. தேசிய ஐக்கியத்தைப் பற்றிகைகளில் மட்டும் காண்பவர்கள் நாங்களல்ல. சகல விஷயங்களையும் செயலில் செய்து காட்டுவதையே நாம் விரும்புகிறோம். காட்டியும் வருகிறோம்''

கல்லூரி அதிபர் திரு பொ. நல்லையா பேசுகையில் கூறியதாவது:-

சகல இன மதப்பெரியார்களும் விருப்பத்தோடு ஆராய்ச்சிசெய்து வருகின்ற புத்தமிழை, இன்று நாம் விழா எடுத்துப் பெருமைப்படுவதில் மகிழ்ச்சியடைகிறேன். பாடபோதனையோடு மட்டுமல்லாமல் புறவேலைகளிலும் மாணவர்களை ஈடுபடச் செய்து அவர்களைப் பூரண மனிதர்களாக ஆக்குவதே எமது இலட்சியம்.''

கொழும்பு தெற்கு இரண்டாவது எம் பி பொன்னுத்துரை வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார்.

தபாற் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரும் கலந்துகொண்டார் விசேட மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

திருமதி அம்பிகா தாமோதரம்பிள்ளையின் மெல்லிசை, செல்வி சிவகுமாரி இராசையா மாணவிகளின் நடனம், இல்லங்களுக்கிடையிலான நாடகப்போட்டி ஆகியனவும் இடம்பெற்றன. தபாலமைச்சரின் பாரியார்

விவசாய முகாம்கள் கலைக்கப்பட்டன

கோட்டை, வெள்ளி

நாடுபூராவிலுமுள்ள 42 விவசாயப்படை முகாம்களையும் மூடிவிடுவதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் சுமார் 10 லட்சம் ரூபா வரை அரசாங்கத்திற்கு நஷ்ட மேற்பட்டுள்ளதால் விவசாயப்படை முகாம்களை மூடிவிடத் தீர்மானித்துள்ளதாக காணி நீர்ப்பாசன அமைச்சர் அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 14-ம் திகதி கட்டாய லீவில் முழுநாட் சம்பளத்துடன் விவசாய வீரர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விவசாயப்படை புனரமைப்பு செய்யப்படுவது சம்பந்தமாக ஆராய்ந்த பின்னர் இவர்களை வேலைக்கு அழைப்பதாக அரசாங்கம் முன்னர் கூறியிருந்தது. அதன் பின்னர் சகல விவசாய முகாம்களும் இராணுவத் தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விவசாய முகாம்களை புனரமைப்பு செய்வது பற்றி ஆராய்ந்த அதிகாரிகள் கடந்த காலத்தில் பலத்த நஷ்டத்துடன் விவசாய முகாம்கள் இயங்கி வந்துள்ளதைக் கண்டு பிடித்துள்ளனர்.

1967-ம் ஆண்டு மார்ச் மாதம் விவசாய முகாம் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 9,800,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இவற்றை நடத்த முடியாதிருப்பதாகவும் இன்றுமுதல் விவசாய முகாம்களைக்கப்படுவதாகவும் நீர்ப்பாசன மின்சார அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா அறிவித்தார்.

கடந்த காலங்களில் விவசாயப்படையினர், நீர்ப்பாசனத் திணைக்களம், நில அபிவிருத்தி திணைக்களம், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட கொந்தராத்து வேலைகளையும் செய்து வந்தனர். ஆயினும் விவசாய வீரர்கள் ஒன்றுபட்டு செய்யப்படாத காரணத்தினுலும், மழை வெள்ளம், அரசாங்க விடுமுறை, சுகவீன லீவு போன்றவைகளினுலும் விவசாயமுகாம் சரிவரச் செயல் படவில்லை என்று அமைச்சர் அறிக்கை ஒன்று கூறுகிறது.

விவசாய முகாம்களில் சரிவரச் செயற்படாததற்குரிய காரணம் பற்றி விசாரணை நடத்துவதற்காக கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

42 விவசாயமுகாம்களிலும் தற்போது இராணுவத்தினர் நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

நீர்ப்பாசன விவசாயத் திட்டங்களில் இளைஞர்கள் பெரும் பங்கெடுத்து கடமையாற்றத் தக்கவாறு தேசிய அபிவிருத்திப் படை ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. இவற்றில் விவசாயப்படை வீரர்களுக்கு முகியத்துவம் கொடுக்கப்படும் என்றும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணைப் பத்திரம்வழங்க யோசனை

கோட்டை, வெள்ளி

அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படவிருக்கும் தனிப்பட்டவரின் காணிக்கு அரசாங்கம் பணத்துக்குப் ப்திலாக 10 வருட 15 வருட 20 வருட தவணைப் பத்திரங்களை வழங்கலாமென காணி விவசாய அமைச்சு அரசாங்கத்துக்கு யோசனை கூறியுள்ளது.

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ் — ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த
இரு கோடுகள்

2வது வாரம் வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'
துணைவன்

உதைபந்தாட்டம்

கடற்படை - யாழ். கோஷ்டி நாளை மோதுகிறது

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்கும், இலங்கை கடற்படைத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையின் கீழ் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் கட்டம் நாளை யாழ்ப்பாணத்திலும், 2-வது கட்டம் 16-ம் திகதி கொழும்பிலும் நடைபெறும்.

நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திம் நடைபெறும் ஆட்டம் பி. ப. 4 மணிக்கு ஆரம்பமாகும். இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றுகிறார்.

இலங்கை கடற்படைக் கோஷ்டி, தற்போது இலங்கையில் முன்னணி வகிக்கும் கோஷ்டிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இக்கோஷ்டியில், ராஜசிங்கம், அஸிஸ், பண்டித்தயா போன்ற இலங்கை உதைபந்தாட்ட கோஷ்டி வீரர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

கடற்படைக் கோஷ்டியுடன் மோதுவதற்காக யாழ் உதைபந்தாட்டச் சங்கம், உதைபந்தாட்ட வீரர்களுக்கு கடந்த இரு வாரங்களாக கடும் பயிற்சி அளித்து ஒரு பலங்கொண்ட கோஷ்டியை உருவாக்கியிருப்பதாக, யாழ். உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. எம். பாலசுப்பிரமணியம் கூறினார்.

(தே நி)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
THE VALLEY OF GWANGI

MANOHARA JAFFNA
Daily 4-30, 7-00 & 9-45 p m
Poya days 10-30 A.M.
Shakespear's
ROMEO and JULIET
(Is no ordinary Love Story)
Starring- 15 years old OLIVIA HUSSEY (Girl)
17 years old LEONARD-WHITING (Boy)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9 45-P.M.
Walter Matthau & Anne Jackson
in
THE SECRET LIFE OF AN AMERICAN WIFE
(Adults only)

சிரமதானமூலம் கி மு.ச.கட்டிடம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு சின்னத்தான் காட்டில் புதிதாகக் கட்டப்பட விருக்கும் கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டிடத்துக்கான அத்திவாரக் கல்லை நேற்று முல்லைத்தீவுப் பட்டண சபைத் தலைவர் தரு ம.சூ வஸ்தியாம்பிள்ளையின் பாரியாரான திருமதி யோகம்மா வஸ்தியாம்பிள்ளை நாட்டிவைத்தார்.

மேற்படி கட்டிடத்தைச் சிரமதானம் மூலம் செய்து முடிப்பதற்கான வேலைகளில் இப்பகுதி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆசிரியைகள் வேண்டாம்

ஆசிரியரை நியமிக்குக

புத்தூர், வெள்ளி

தலைமை ஆசிரியர் இன்றி இயங்கிவரும் எமது பாடசாலைக்கு உடனடியாக தலைமை ஆசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் நவக்கிரி அரசினர் மெதடிஸ் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு சி, சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது நிறைவேற்றப்பட்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு.

பாடசாலையில் சராசரி நூற்றி அறுபத்திரண்டு பிள்ளைகள் இருந்தும்நான்கு ஆசிரியர்கள் மட்டும்கடமையாற்றுகிறார்கள். எனவே மிகுதி ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். பெண் ஆசிரியர்கள் தற்போது மூன்று பேர் கடமையாற்றுகிறார்கள். அவர்களை நீக்கி பயிற்றப்பட்ட ஒருபெண் ஆசிரியரை மட்டும் நியமித்துத் தர வேண்டும்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு சி. சிவசுப்பிரமணியம் உப தலைவர் திரு க. பொன்னையா, செயலாளர் திரு பா. பொன்னம்பலம் பொருளாளர் திரு க. சுப்பிரமணியம் 6 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

வழிப்பறி

திருநெல்வேலி வெள்ளி

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுவனின்சங்கிலியை மிரட்டிப் பறித்தார்களாம்.

மேற்படி சம்பவம் நீராவியடியில் உள்ள சிவகுருநாதர் ஒழுங்கையில் நேற்று நண்பகல் நடைபெற்றது. பிரஸ்தாபவன் பாடசாலையிலிருந்து வீடு நோக்கித் திரும்பும் வழியில் இச் சம்பவம் நடைபெற்றது. அழுதுகொண்டு வீடு வந்த சிறுவனைச் சங்கிலி எங்கே என்று கேட்டபோது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 8—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 பாட்டு, 7-15 வீணை, 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

யாழ். நகரில் பொலிஸ் விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் தினவிழா அடுத்த மாதம் 7-ம் திகதி முதல் 15-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது

பாடசாலைகள் சங்கங்களுக்கிடையில் வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கைப்பந்தாட்டப் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

9-ம் திகதி சுன்னாகத்திலும், 10-ம் திகதி பருத்தித்துறையிலும், 11-ம் திகதி சாவகச்சேரியிலும் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள், பொலிஸாரினால் செய்து காண்பிக்கப்படும்.

பொலிஸ் நிலையம் இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

நெல்லியடி பொலிஸ் நிலையம் வேறொரு இடத்திற்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளது. கரவெட்டி தபால் கந்தோருக்கு அண்மையிலுள்ள முன்னாள் உதவி பொலிஸ் அதிபர் ஒருவரின் வீட்டிலேயே

இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கிளைவ் பெர்னாந்தோ குருநாகல் பொலிஸ் நிலையத்துக்கும் கொழும்பு இரகசியப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த திரு. சாம் சமரசேகரா பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

0 0 0

பருத்தித்துறை இலங்கை வங்கி பிரதம எழுதுவினைஞர் திரு. ஆர். சிவலிங்கம் சிறுப்பர் பதவி பெற்று கொழும்பு தலைமைக்காரியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

0 0 0

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபையில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. சோமசுந்தரம் புத்தளம் நகரசபைக்கும் புத்தளம் நகரசபையில் கடமையாற்றிய திரு எஸ். நடராசா பருத்தித்துறை நகரசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை நகரசபையில் கடமையாற்றிய திரு. ஆ. யோகேஸ்வரனும் புத்தளம் நகரசபைக்கும் திரு. ஆ. ஞானப்பிரகாசம் யாழ். மாநகரசபைக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

0 0 0

அம்பன், வெள்ளி

நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. ம.கந்தையா வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

உடுவில், வெள்ளி

களுவாஞ்சிக்குடி கழுதை முனை மகாவித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றிய சங்கீத பூஷணம் நா. செல்லமுத்து இம்மாதம் முதலாம் திகதி முதல் மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்படடுள்ளார்.

பென்ஷன் வழங்கத்திட்டம்

கோட்டை, வெள்ளி

இப்போதுள்ள ஏழைகள் உதவிப்பணம் வழங்கும் முறை அகற்றப்பட்டு அரசாங்க சேவையிலுள்ளபென்சன் திட்டம் போன்று விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பென்ஷன்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக சமூ சேவை

தீர்ப்பு ஊர்ஜிதம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட்டினால் வழங்கப்பட்ட தீர்ப்பு ஒன்றை அப்பீல் நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்து தீர்ப்பளித்துள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த நன்னுப்பிள்ளை அப்புப் பிள்ளை அல்லது கோவிந்தன் என்பவர் கடந்த வருடம் ஆவணி மாதம் 25-ம்திகதி பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த தி. கிருஷ்ணவேணி என்ற இளம் பெண்ணின் வீட்டிற்குள் புகுந்து அவர்மீது பலாத்காரம் புரிந்ததாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா எதிரியைக்குற்றவாளியாகக் கண்டு 8மாதச் சிறைத் தண்டனை விதித்திருந்தார். எதிரி தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருந்தார். அப்பீல் நீதிமன்றம் பருத்தித்துறை மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்துள்ளது.

தமிழர் ஒருவர் தெரிவு

கோட்டை, வெள்ளி

இலங்கைத் தேசிய நூல் நிலைய சேவை சபைக்கு ஒன்பது அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுள் ஐவர் கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய நால்வரும் மூன்று அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். விபரம் பின்வருமாறு: திரு எஸ். யு. சோமசேகரம் (யாழ் மாவட்ட ஒய்வு பெற்ற வித்தியாதிபதி) திரு டி.ஜி சுகதாசா (வித்தியாதிபதி) திரு ஹேமஸ்ரீ பிரேமவர்த்தனா (கலாச்சார விவகார டைரெக்டர்), திரு பி. எச். பி. டி. சில்வா ஜனாப் எம்.எம். பஹீதீன் திரு ஆர். வீரக்கூன், திரு ஜே. டபிள்யூ சுபசிங்கா, திரு, டபிள்யூ வி எல், எஸ். டி. அல்விஸ் ஜனாப் ஹலீம் இஷாக்.

சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு, வெள்ளவத்தை இராமகிருஷ்ணா மண்டபத்தில் இம்மாதம் 9-ம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

திரு கோ ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெறும் குருபூசையில் செல்விகள் செல்வமணி வடிவேலு, சற்

ராஜா என். எஸ். கிருஷ்ணன்
(யாழ்ப்பாணம்) ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி
தினசரி 3 காட்சிகள் நடித்த
67-ல் என்.எஸ். கிருஷ்ணன்
(எஸ், ரி. ஆர். பிரிஸ்)
அமரர் அண்ணா, தமிழ்க் முதல்வர்
மு. கருணாநிதி, திருமுருக கிருபானந்தவாரியார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

துணைவன்

கதை, வசனம்
பாலமுருகன்

சங்கீதம்
K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

67-ல் என்.எஸ்.கே. திருவிளையாடல்

(எஸ். பி. ஆர். பிலிம்ஸ்)

அமரர் அண்ணா, தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பிலிம் (I) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலில் காண்பிக்கப்படும்.

நோக்கித் திரும்பும் வழியில் இச் சம்பவம் நடைபெற்றது. அழுதுகொண்டு வீடு வந்த சிறுவனைச் சங்கிலி எங்கேன்று கேட்டபோது வழியில் யாரோ மிரட்டி விட்டதாகக் கூறினராம். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பட்டுள்ளது. கரவெட்டி தபால் கந்தோருக்கு அண்மையிலுள்ள முன்னாள் உதவி பொலிஸ் அதிபர் ஒருவரின் வீட்டிலேயே புதிய பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

சன் திட்டம் போன்று விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பென்ஷன் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக சமூ சேவை அமைச்சர் திரு. க. ரி. பி. தென்னக்கூன் தெரிவித்துள்ளார்.

பெறும்.

திரு. கா. ஆம்வாப்பிள்ளை தலைமையில் நடைபெறும் குருபூசையில் செல்விகள் செல்வமணி வடிவேலு, சற்சொரூபவதி நாதன் ஆகியோர் உரையாற்றுவர்.

வெற்றிகரமான 2வது வாரம்!

இலங்கையில் தயாரிக்கப்பட்ட

மீரா மூவிஸாரின்

ஸ்டூடியோ:- ஆர். டி. இலங்கை.

வெள்ளி சங்கு

வின்ஸர்

(யாழ்ப்பாணம்)

செல்லமஹால்

(கொழும்பு)

ரோஸ் (பாமன்கடை)

நெல்சன் (திருகோணமலை)

கிங்ஸ் (நீர்கொழும்பு)

இம்பீரியல் (மட்டக்களப்பு)

மற்றும் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் காண்பிக்கப்படுகின்றது.

டைரக்ஷன்

W.M.S. கம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நிறுத்த மேற்பார்வை யோசனையை எகிப்து நிராகரித்தது

கெய்ரோ, ஆக. 7

மேற்காசியப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணும்பொருட்டு அமெரிக்கா தயாரித்துள்ள திட்டத்தில் போர் ஓய்வை மேற்பார்வைசெய்வது சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனையை ஐக்கிய அரபுக்குடியரசு நிராகரித்து விட்டது.

இதேசமயம் மேற்காசியாவில் அமெரிக்கத்திட்டத்தின் படி போர் நிறுத்தம் ஏற்படவும் தொடர்ந்து அமைதி யேற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் அங்குசெல்லவிருக்கும் மேற்காசியாவுக்கான ஐ. நா. விசேஷ தூதர் டார்டர் குணர் ஜாரிங் நேற்று ஐ. நா. தலைமைக் காரியதரிசியுடனும் இதர ஐ. நா. அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினர்.

மேற்காசிய நிலைபற்றியும் அமெரிக்க சமாதான யோசனை அமுல் பற்றியும் விரிவான அறிக்கை ஒன்றை ஐ நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தயாரித்துவருகிறார். விரைவில் இந்த அறிக்கையை ஐ நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிப்பார்.

அடுத்த வார இறுதிக்குள் மேற்காசியாவில் போர் நிறுத்தம் ஏற்படுமென்ற நம்பிக்கை ஐ. நா. வட்டாரங்களில் வலுப்பெற்றுள்ளது.

அரபு இராணுவ நிலைகள் மீது இஸ்ரேலியர் தாக்குதல்

கெய்ரோ, ஆக 7

சூயஸ் கால்வாய்ப் பகுதியில் நேற்று ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவ நிலைகள்மீது 40 இஸ்ரேலியப் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கின.

ஒரு விமானத்தை ஐக்கிய அரபுத் துருப்புக்கள் சுட்டு வீழ்த்தியதாக கெய்ரோ தெரிவித்தது. ஆனல் தாக்குதல் நடத்திய தங்கள் விமானங்கள் யாவும் பவுத்திரமாகத் திரும்பிவிட்டதாக இஸ்ரேல் கூறியது.

ஜோர்டான் எல்லையிலும் அரபுக் கொமாண்டோக்களுக்கும் இஸ்ரேலிய எல்லைக்காவல் துருப்புக்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

"இலங்கை மாநாட்டில் தவறுகள் நீக்கப்படும்"

— கருணாநிதி

பாரிஸில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கு ஆட்சேபம்

சென்னை, ஆக 7

சென்னையில் கூடிய இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டிலும் பாரிசில் கூடிய உலகத்தமிழ் மகாநாட்டிலும் கூறப்பட்ட சில கருத்துக்களை தமிழக முதல்வர் கருணாநிதியும் தமிழக சட்டசபை சபாநாயகர் புலவர் திரு. கே. கோவிந்தனும், தமிழரசுத் தலைவர் ம. பொ. சிவஞானமும் ஆட்சேபித்துள்ளனர்.

அண்மையில் கூடிய மூன்றுவது உலகத்தமிழ் மகாநாட்டில் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்கள் தொன்மையான ... காது. ஆகவே ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரைகளை இனியேனும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

வெளிநாடு சென்று திரும்பிய ம. பொ. சிவஞானத்திற்கும் முதல்வர் கருணாநிதிக்கும் செவ்வாய்க்கிழமையன்று மைலாப்பூர் லூட்லண்ட்ஸ் ஹோட்டலில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி மாநாட்டில் கூறப்...

நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு

மணிலா, ஆக 7

மலேசியாவிலிருந்து வந்த நடிகை குமாரி நீனுஸ்டுவாடை இம்மாதம் முப்பதாம் திகதிக்குள் பிலிப்பைன்சை விட்டு போய்விட வேண்டுமென்று பிலிப்பைன் குடியேற்ற கமிஷன் இலாகா உத்தரவிட்டுள்ளது.

இவரையும் இவருடன் கவர்ச்சிப் படங்களில் நடித்துவந்த வேறு இரு வெளிநாட்டு நடிகர்களையும் விசாரணைக்காக மேற்படி கமிஷன் அழைத்திருந்தது. ஆனல் அந்த இரண்டு பேரும் வரவில்லை. தம்முடைய காரியாலய அனுமதியில்லாமல் கவர்ச்சிப் படங்கள் தயாரிக்கக்கூடாது என்றும் குடியேற்ற இலாகா கமிஷனர் எச்சரித்துள்ளார்.

காவேரி நீர்ப் பிரச்னை

சென்னை, ஆகஸ்ட் 7

காவேரி ஆறு சம்பந்தமாக மைசூர்-தமிழ்நாடு மாநிலங்களிடையே உள்ள தகராறில் இன்னும் இரண்டொரு மாதங்களில் உடன்பாடு எதுவும் ஏற்படாவிடில் அதைத் தீர்க்க மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமென்று யூனியன் பாசன, விசை மந்திரி டாக்டர் ஏ. எல். ராவ் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி மைசூர் அரசாங்கம் காவேரி ஆற்றில் அணைகட்டிவருவதாக தமிழ்நாடு தொழில் மந்திரியும், பொதுப்பணித்துறை மந்திரியும் தன்னிடம் கடுமையாகப் புகார் தெரிவித்ததாக அவர் கூறினர்.

மைசூர் வியப்பு

காவேரி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக உள்ள 1924ம் வருட ஒப்பந்தத்தை மைசூர் ...

விலைபோகா விமானம்

புதுடில்லி, ஆக. 7

இந்தியன் ஏர்லைன்ஸ் வசமுள்ள டகோடா விமானங்களில் எதையும் வாங்க எவரும் முன்வரவில்லை, விளம்பரங்கள் போட்டும் பலனேற்படவில்லை. இத்தகவல்ராஜ்ய சபையில் வெளியிடப்பட்டது. விமானப்போக்கு வரத்து மந்திரிஇத்தகவலைவெளியிட்டு 'எவருக்குமே தேவையில்லை என்றல் காயாலான் கடைச் சரக்காகத்தான்விலைபோகும்' என்றர். டகோடா விமானத்தின் விலை ரூபா 120 தான் என்றும் அவர் கூறினர்.

... ...

'முடிவை ஏற்காதவர்கள் விலகலாம்'

ஆமதாபாத், ஆகஸ்ட் 7

ஹிதேந்திர தேசாயின் மந்திரி சபையைக் கவிழ்க்கலாகாதென்ற சுதந்திரக்கட்சியின் தேசிய சபை செய்துள்ள முடிவை ஒப்புக்கொள்ளாதவர்கள் கட்சியிலிருந்து விலகிக்கொள்ளலாமென்று சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. எம். ஆர். மஸானி அறிவித்துள்ளார்.

— —

பிச்சைக்காரனை கொலைசெய்த பிச்சைக்கரன்

சென்னை, ஆகஸ்ட் 7

பிச்சைக்காரரிடையே ஏற்பட்ட சண்டையில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

பிச்சை எடுத்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு ஒட்டேரி விடுதியில் வைக்கப்பட்டிருந்த அகமது (25) ரோசி (35) என்றஇருவரிடையேயும் தகராறு ஏற்பட்டதாகவும்இதைத்தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் ரோசி, அகமதை அடித்துக் கொலைசெய்ததாகவும் தெரியவந்துள்ளது

ரோசியைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

— —

காதலனால் கைவிடப்பட்ட இளம் பெண்தற் கொலை

யாழ்ப்பாணம், சனி

காதலினல் கைவிடப்பட்ட இளம்பெண் ஒருவர் தனது கழுத்தை கயிற்றினல் நெரித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கொக்குவில் மேற்கில் நடைபெற்றுள்ளது

கொக்குவில் அரசடி வீதியைச் சேர்ந்த கந்தையா வல்லிபுரம் மகள் விஜயலஷ்மி (வயது 24) என்பவரது மரணவிசாரணையின் போது இத்தகவல் தெரியவந்தது.

இறந்தவருக்கும் ஒரு சுருட்டுத் தொழிற்சாலை முதலாளி ஒருவருக்கும், காதல் தொடர்பிருந்ததாகவும், சம்பவதினமிரவு முதலாளி இறந்தவரது வீட்டுக்குவந்து இறந்தவரைக் கூப்பிட்டதாகவும், அவர் படலையடிக்குப் போக மறுத்ததாகவும் அப்போது குறிப்பிட்ட முதலாளி இறந்தவரிடம் 'இதுதான் கடைசி' என்று கூறிவிட்டுப் போனதாகவும், இதன்பின்னர் தாம் கடைக்குப் போய்த் திரும்பிய போது அக்கா இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் இறந்தவரின் சகோதரரான பரமநாதனை என்பவர் தமது சாட்சியத்தில் கூறினர்.

பரமநாதன் குறிப்பிட்ட முதலாளியின் சுருட்டுத் தொழிற்சாலையில் சுருட்டுச் சுற்றுபவர் என்றும், சம்பவதினத்துக்கு முதல்நாள் பரமநாதன் வேலைக்கு வர வேண்டாம் என்று முதலாளி கூறியதாகவும் கூறப்பட்டது. இவர்களது பெற்றர் மொனருகலையில் வசித்து வருவதாக விசாரணையில் தெரியவந்தது.

பிரேத பரிசோதனை நடைபெற்றது. திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

— —

ராஜாஜி கருத்து

சென்னை, ஆக 7

கிழக்கு ஜெர்மனியுடன் உறவை கான்ஸல் ஜெனரல் அந்தஸ்துக்கு உயர்த்துவதென இந்திய அரசாங்கம் செய்துள்ள முடிவை சுதந்திராக்கட்சித் தலைவர் திரு. ராஜாஜி கண்டித்துள்ளார்.

இது மேற்குநாடுகளுடன் நமக்குள்ள உறவைப் பாதிக்கக்கூடிய தொன்றெனஅவர் எச்சரித்துள்ளார்.

— —

ரயில்-பஸ்மோதி 9 பேர் பலி

ஹைதராபாத், ஆகஸ்ட் 7

ஆந்திரப்பிரதேசத்தில் ஹைதராபாத்துக்குச் சமீபத்தில் பாதுகாப்பில்லா ரயில்வேக் கடவையில் ரயிலுடன் ஒரு பஸ் மோதியதில் 9பேர்மாண்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

— —

வாலிபர் கொலை

பிரதமருக்கு டாக்டர் பட்டம்

பல்கலைக் கழகம் வழங்கும்

கோட்டை, வெள்ளி

பிரதமர் திருமதி பண்டாரநாயகா. கவர்னர்ஜெனரல் திரு வில்லியம் கோபல்லவ, கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்மூத் ஆகியோருக்கு இலங்கைப் பல்கலைக்கழக செனட் சட்டத்துறையில் கலாநிதிப்பட்டம்வழங்க உள்ளது.

இம்மாதம் 26ந் திகதி நடைபெறவிருக்கும் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் இவர்களுக்கு பட்டங்கள்வழங்கப்படும். இலங்கைத்துறையில் பிரபலமான நால்வருக்கும் கலாநிதிப்பட்டம் வழங்கப்படஉள்ளது.

— —

தபால் மா அதிபர் ஓய்வு பெறுகிறர்

கோட்டை, வெள்ளி

தபால் தந்தித் தொடர்பு மா அதிகாரி திரு. வேர்ணன் அபயசேகரா கடந்த வாரம் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறும் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அக்டோபர் மாதத்திலிருந்து இவர் ஓய்வு பெறுவார். இவர் தபால் மா அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன் யாழ். அரசாங்க அதிபராகக் கடமையாற்றினர்.

— —

மிகவிரைவில் விண்ணப்பம் கோரப்படும்

கோட்டை, வெள்ளி

மிகவிரைவில் 2,500பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். 22-45வயதிற்கும் இடைப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து இவ்வாரம் விண்ணப்பங்கள் கோரப் படலாமெனத் தெரியவருகிறது இவ்வருட முடிவுக்குள் இவர்கள் நியமனம் பெறுவார்கள் என கல்வி அமைச்சு அதிகாரி ...

4 வீடுகள் தீக்கிரை!

பருத்தித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியிலுள்ள மடத்துப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் ஒரு வீடு தீக்கிரையானது

எரிந்து கொண்டிருந்த விளக்கிலிருந்த திரியை எலியொன்று இழுத்துக் கொண்டு வீட்டின் முகட்டில் ஏறியதாகவும் அப்போது வீட்டில் தீப்பற்றியதாகவும் தெரியவருகிறது.

மாயக்கை விறுமர் கோவிலுக்கு அண்மையிலுள்ள மூன்று வீடுகளும் நண்பகல் தீப்பற்றி எரிந்து சாம்பராயின. கோவிலுக்குச் சேர்ந்த இவ்வீடுகளில் தீப்பற்றியதற்கான காரணம் தெரியவில்லை. பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

......

ஒருவரைக் காப்பாற்ற இருவருக்குகாயம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

குறுக்கே ஓடிப்போன குழந்தை ஒன்றைக் காப்பாற்றுவதற்கு எத்தனித்த வான் ஒன்று சுவருடன் மோதிக் குடைசாய்ந்தது. சுவருடன் நின்ற தாயும், குழந்தை ஒன்றும் படுகாயத்திற்குள்ளாகி மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வானில் சென்றவர்கள் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டனர்

பருத்தித்துறை - காங்கேசன்துறை பிரதான வீதியில் இன்படுட்டி என்னுமிடத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை நடந்தது.

— —

'இலங்கை முழுதும் மின்சாரமயமாகும்'

எழுதுமட்டுவாள், வெள்ளி

''இலங்கை பூராவும் மின்சாரமயமாவதற்கு அரசாங்கம் மஸ்கேலியா மின்சாரத்திட்டம் மூலம் நடவடிக்கை எடுத்துவருகிறது'' என கைதடி நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சடாட்சரம் கூறினர்.

பொருளாதாரத்தையும் நாட்டின் ஐக்கியத்தையும் வளர்ப்பதில் சன சமூக நிலையங்கள் முன்னணியில் திகழவேண்டுமெனவும் அவர் ...

'சிறப்புற சேவையாற்றுவது ஆசிரிய உலகம்'

மட்டுவில், வெள்ளி

'ஒரு சமூகத்தின் உயர்விற்கான சகல அம்சங்களிலும் சிறப்புச் சேவை செய்வது ஆசிரிய உலகம் ஒன்றுதான்' என மட்டுவில் கந்தர் மகா வித்தியாலய அதிபர் திரு பொன்னையா சபாரத்தினம், மேற்படி மகாவித்தியாலய கனிஷ்ட பகுதி தலைமை ஆசிரியர் திரு க. வேலுப்பிள்ளை இளைப்பாறியதைத் தொடர்ந்து நடைபெற்ற பிரியாவிடைக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப்பேசிய பொழுது குறிப்பிட்டார்.

'இந்த மகாவித்தியாலயத்தை நிறுவியதிலிருந்து தொடர்ந்து திரு. வேலுப்பிள்ளை வித்தியாலயத்திற்கு அளப்பரிய தொண்டுசெய்து வந்திருக்கிறர். இதன் ஸ்தாபகர் திரு. கந்தர் இவருடைய நெருங்கிய உறவினராகும்' என மேலும் பேசிய அவர் குறிப்பிட்டார்.

திருமதி பவளம் முத்தையா உட்பட பல ஆசிரியர்களும், மாணவர்களும் உரை நிகழ்த்தினர். இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. வேலுப்பிள்ளை நன்றியுரை கூறினர்.

......

பாடசாலைகள் விடுமுறை

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள சகல அரசினர் பாடசாலைகளும் இரண்டாந்தவணை விடுமுறைக்காக இன்று முடப்படுகின்றது. செப்டம்பர் மாதம் 1-ந் திகதி இவை திரும்ப ஆரம்பமாகும்,

முஸ்லிம் பாடசாலைகள் யாவும் இம்மாதம் 14-ந் திகதி இரண்டாம் தவணை விடுமுறைக்காகமூடப்படும்.

......

இவர்கள் செல்வர்

உடுப்பிட்டி, வெள்ளி

கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் வடமாகாண இளைஞர் விவசாயக் கழகங்களின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக நெல்லியடி சண்முகானந்தா இளைஞர் விவசாயக் கழகம் திருவாளர்கள் க. பாலேந்திரம், தா. கனகரத்தினம், வ. சாந்தலிங்கம், செ. பாலச்சந்திரன் ஆகியோரைப் ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செபித்துள்ளனர்.

அண்மையில் கூடிய மூன்றாவது உலகத்தமிழ் மகாநாட்டில் மொரிஷஸ் தாரோ, ஹரப்பா ஆகிய இரு மிகத் தொன்மையான இடங்களில் முன்பு இருந்ததாக காணப்படும் நாகரிகம், தமிழர் நாகரிகமாக அல்ல என்று ஆராய்ச்சியாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

சென்னையில் கூடிய உலகத்தமிழ் மகாநாட்டில் தமிழுக்குச் சுயமான வரிவடிவம் கிடையாது. இப்பொழுது இருக்கும் தமிழ் வரிவடிவம் வேற்று மொழியிலிருந்து கிடைத்தது ஆகும் என்று தமிழ்க்கருத்தரங்கில் ஓர் அந்நிய ஆராய்ச்சியாளர் கூறியிருந்தார். மற்றும் பாரில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் தமிழ் தவிர ஆங்கில மொழியாகவே இருந்தது. இவற்றைத் தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் வன்மையாக ஆட்சேபித்தார். ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கில இலக்கிய உலகத்தை வளப்படுத்தவே உதவும். தமிழ்வளர்ச்சிக்கு பயன் கிடைக்

நக்ஸல்பாரி இளைஞன் தப்பி ஓட்டம்!

விருத்தாசலம், ஆகஸ்ட் 7

பெண்ணாகடம் அருகே சௌந்தரசோழபுரம் என்னுமிடத்தில் நடைபெற்ற குண்டுவெடி வழக்கில் சம்பந்தப்பட்ட நக்ஸல்பாரி இளைஞன் ஹரிகிருஷ்ணன் (வயது 21) ஏன் பவர் போலிஸ் காவலிலிருந்து தப்பி யோடி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற மார்ச் மாதம் நடைபெற்ற குண்டுவெடி சம்பவத்தைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டவர் மலகூடம் செல்லப்போவதாக கூறியபொழுது இரு போலிசார் அவரை அழைத்துச் சென்றதாகவும் போலிசாரை ஏமாற்றிவிட்டு அவர் ஓடிவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

உண்ணாவிரதம்

டாக்கா, ஆகஸ்ட் 7

பாகிஸ்தான் அவாமிக் கட்சித் தலைவர் மௌலானா பாஷானி மூன்று நாள் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார். வெள்ளத் தடுப்புக்கு நிரந்தரமான ஏற்பாடு செய்யப்பட வில்லை யென்பதற்காகவே அவர் உண்ணாவிரதமிருக்கிறார்.

அளிக்கப்பட்ட வரவேற்பின் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி மாநாட்டில் கூறப்பட்ட கருத்துகளுக்கு அங்கு சென்ற பேராசிரியர்கள் உடனே மறுப்புக் கொடுத்திருக்கவேண்டும் தமிழகத்தில் உள்ள மூன்று பல்கலைக்கழகத் தலைவர்களும் இனியாவது கூடி ஆராய்ந்து மேற்சொன்ன 'புது ஆராய்ச்சி' கண்டுபிடிப்புகளை மறுக்கச் செய்யவேண்டும் அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால் இம்மூன்று பல்கலைக்கழகத்திற்கு அப்பாற்பட்ட பிறந்த தமிழ்ப் புலவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை தமிழக அரசாங்கமே போட்டு இக்கமிட்டியினர் நன்கு ஆராய்ந்து இக்கூற்றுகளை மறுக்கவேண்டும்'' என்று சபாநாயகர் கோவிந்தன் கூறினார்.

இலங்கையில் நடைபெறும் நாலாவது மாநாட்டில் நிச்சயமாக இப்படியான தவறுகள் தவிர்க்கப்படுமென்று, ம. பொ. சி.யின் கருத்தையும், சபாநாயகர் கருத்தையும் ஏற்றுக்கொண்டு பேசிய கருணாநிதி உறுதியளித்தார்.

— —

காப்பு அணியும் இளைஞர்

கோட்டயம், ஆகஸ்ட் 27

வேலை அணிவது வனிதையர் உரிமை, காப்பு அணிவது காரிகையர் பெருமை என்பது உண்மைதான். ஆனால் கேரள இளைஞர் இவ்வுரிமையிலும் பெருமையிலும் பங்குபற்றிக் கொண்டுள்ளனர்.

கேரளத்தில் பல ஆண்கள் செப்புக் காப்புகளைப் போடத் தொடங்கியுள்ளனர். இக்காப்புகளை அணிவதனால் மூட்டுவலி முடக்கு வாதம்போன்ற நோய்கள் ஆணுகாதென அவர்கள் நம்புகின்றனர். அரசியல் தலைவர்களும் காப்பு அணிவதில் முன்நிற்கின்றனர். கேரள புதுக்காங்கிரஸ் தலைவர் திரு. கே. எம். ஜோர்ஜும் காப்புகள் அணிந்து காட்சி தருகிறார்.

250 பேர் பலி

காட்மாண்டு, ஆகஸ்ட் 7

நேபாளத்தில் வெள்ளத்திற்கும் மண்சரிவுக்கும் 250 பேர் பலியானார்கள் என்று அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

இரண்டு லட்சம் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

தாக அவர் கூறினார்.

மைசூர் வியப்பு

காவேரி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக உள்ள 1924ம் வருட ஒப்பந்தத்தை மைசூர் அரசு மீறியுள்ளது என்று கூறி, அது குறித்து டிரிப்யூனல் ஒன்று விசாரிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கோரியுள்ளது குறித்து மைசூர் அரசாங்க அதிகாரி ஒருவர் வியப்புத் தெரிவித்தார்.

பழைய கோரிக்கையைத் தமிழ்நாடு அரசு மீண்டும் திடீரெனத் தெரிவித்துள்ளது குறித்து எதுவுமே புரியவில்லையென அவர் மேலும் குறிப்பிட்டார்.

— —

தந்தையும், மகளும் பலி

பெங்களூர், ஆகஸ்ட், 7

வீதியில் சென்றுகொண்டிருந்த காரொன்று வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியன் விளைவாக தந்தையும், மகளும் மரணமானார்கள். காரில் சென்று கொண்டிருந்த மற்ற ஆறு பேரும் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். பெங்களூரிலிருந்து சுமார் 35 மைல் தொலைவிலுள்ள சிக்பில்லபூர் என்னுமிடத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

சத்திய சாயி பாபாவை தரிசிப்பதற்காக புட்டபர்த்திக்கு இவர்கள் சென்று கொண்டிருந்தனர். காயமடைந்தவர்களில் இருவர் நிலை கவலைக்கிடமாயுள்ளது

— —

சுயமரியாதை இயக்கப் பிரமுகர் மரணம்

திருச்சி, ஆகஸ்ட் 7

சுயமரியாதை இயக்கப் பிரமுகர் திரு எஸ் வி. லிங்கம் காலமாகிவிட்டார். 78 வயதான அவர் கடந்த பல நாட்களாக நோய்வாய்ப் பட்டிருந்தார். ஈ. வே. ரா. பெரியாரின் ஆரம்பகால சீடரான இவர், அண்ணு, ஈ. வே. ராவைவிட்டு விலகி தி. மு. க. அமைத்த போது அண்ணுவுடன் சேர்ந்து கழகம் அமைப்பதில் முன் நின்றார். தி மு க வட்டாரங்கள் இவர் மரணம் குறித்து பெருங்கவலை தெரிவித்துள்ளன

— —

சாயிபாபா பஜனை

தாவடி, வெள்ளி

கொக்குவில் மத்திய மாதர் சங்கப் பிரசாந்தி நிலையத்தில் ஒவ்வொரு போயா முதல் நாளும் சத்ய சாயிபாபா பஜனை நடாத்தப்பட்டுவருகிறது.

நோயினால் ஒரு பஸ் மோதி யதில் 9பேர்மாண்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

— —

வாலிபர் தொல்லை

உடுவில், வெள்ளி

மானிப்பாயிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் கல்வி பயிலும் மாணவிகள் பாடசாலைக்கு செல்லும் பொழுதும் பாடசாலையிலிருந்து வீடு திரும்பும்பொழுதும் வேலையற்ற சில வாலிபர்கள் தொல்லை கொடுப்பதாக அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக மாணவிகளின் பெற்றோர் பலர் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரை தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டியுள்ளனர். பாடசாலை வாயிலில் காலையும், மாலையும் பொலிஸாரை நியமிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளதாம்.

— —

'தமிழில் வெளியிடுக'

மாவிட்டபுரம், வெள்ளி

'இன்றைய அரசியல் நிர்ணய சபை விவாதங்களை தமிழில் வெளியிடுக' என அரசைக்கோரும் தீர்மானம் ஒன்றை உடுவில் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறிய இத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் இன்றைய அரசியல் நிர்ணய சபை விவாதங்களையும் அவற்றையொட்டி எடுக்கும் நடவடிக்கைகளையும் வாசித்தறியக்கூடியதாக நாடாளுமன்றத்தில் நிகழ்த்தும்உரைகளைத் தமிழில் மொழி பெயர்த்து நாடாளுமன்ற நடைமுறை ஏட்டில் இடம் பெறச்செய்யுமாறு கௌரவ பிரதம மந்திரியையும் அரசியல் நிர்ணய சட்ட விவகார அமைச்சரையும் கேட்டுக்கொள்வதென சபை தீர்மானித்தது.

— —

சைக்கிளில் அனுராதபுரம் செல்கின்றனர்

திருநெல்வேலி, வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பன்னிரண்டு சாரணர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று சைக்கிளில் அனுராதபுரம் புறப்பட்டுச் சென்றது.

சாரணர்பயிற்சிக்காக நேற்றுப்புறப்பட்ட இக்கோஷ்டி 3 தினங்களில் அனுராதபுரத்தைச் சென்றடையும்.

கோரப் படலாமென்று தெரியவருகிறது இவ்வருட முடிவுக்குள் இவர்கள் நியமனம் பெறுவார்கள் என கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொருளாதாரத்தையும் நாட்டின் ஐக்கியத்தையும் வளர்ப்பதில் சன சமூக நிலையங்கள் முன்னணியில் திகழவேண்டுமெனவும்அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

விவசாயக் கழகம் திருவாளர்கள் க. பாலேந்திரம், தா. கனகரத்தினம், வ. சாந்தலிங்கம், செ. பாலச்சந்திரன் ஆகியோரைப் பிரதிநிதிகளாக அனுப்புவதென முடிவுசெய்துள்ளது.

காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்

டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுமுழுதாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுமுழுதாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோய்களிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

R0447

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

துறவி ஒருவன் சதா இறைவனைச் சிந்திப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் இல்லறத்தான் ஒருவன் தன் குடும்பபாரத்துக்கிடையில் கடவுளை கருத்தில் வைக்க முயலுவானாகில் அது பெரிதும் பாராட்டத் தக்கது.

— பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 23-ந் திகதி (8-8-70)

வாக்குறுதி எங்கே?

"இராணுவத் தாக்குதல் இனி இராது: அதிகாரிகள் வாக்குறுதி; மயிலிட்டி சம்பவங்களின் பின் நடந்த சமரச மகாநாடு" என்ற தலைப்புகளுடன் நேற்றுமுன் தினம் "ஈழநாடு" பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று மறுநாளே அதாவது நேற்று "தொண்டமானாற்றிலும் இராணுவத் தாக்குதல்" என்ற தலைப்புடன் வெளியான செய்தியைப் பார்க்கையில், இராணுவ அதிகாரிகள் அளித்த வாக்குறுதியை காப்பாற்ற முடியவில்லை என்றே தோன்றுகின்றது இது சாதாரண அற்ப விஷயமல்ல. பொதுமக்கள் அமைதியாக வாழமுடியாதபடி இராணுவத்தினரே தாக்குவதாயின், வேலியே பயிரை மேய்வதாயின், பின் மக்கள் என்ன செய்வது?

சட்டவிரோத குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுக்கவேண்டியது தான் ஆனால் நாம் இப்பத்திகளில் பன்முறையும் கூறியுள்ளதுபோல் இராணுவத்தினரால் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் நிம்மதியாக வாழமுடியாதபடி துன்பங்கள் நேரிடுவதாயின், அவ்வித இராணுவத்தினர் மீது உடன் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது இராணுவத்தையே அங்கிருந்து நீக்க வேண்டும். பொதுமக்களின் நன்மையைப் பாதுகாக்க வேண்டியதே அரசாங்கத்தின் முதல் கடமை. பொதுமக்களில் சிலர் தவறாக நடந்திருப்பின், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டியதே முறை. அதைவிட்டு, இராணுவத்தினரே எதேச்சாதிகாரமாக மக்களைத் தாக்குவதாயின், அது சகிக்கமுடியாததாகும். அரசாங்கத்துக்கு இது இழுக்காவதுடன், இதை இப்படியே தடுக்காமல் விட்டுக்

வித அக்கிரமங்கள் நடக்காமலிருக்க அதிகாரிகள் விசேஷ நடவடிக்கை ஏதும் எடுக்கப்போகிறார்களா? அப்படியாயின் அதன் விவரமென்ன? இக் கேள்விகளுக்கு விவரமான பதில் தேவையாகும். பாதுகாப்பு இலாகா உதவி அமைச்சர் நேரில் வந்தசமயம் இதே விஷயமாக சில உறுதிமொழிகள் கூறினர். ஆனால் இவையெல்லாம் நீர்மேல் எழுத்தாகியுள்ளன.

இராணுவத்தினரைக் கட்டுப்படுத்த முடியவில்லையாயின், பொதுமக்கள் அமைதியாக வாழ முடியாமல் இராணுவத்தரின் திடீர் திடீரெனத் தாக்குவதாயின், அவ்வித இராணுவத்தை இப்பகுதிகளிலிருந்து உடன் நீக்கிவிடுவதே மேலாகும். கள்ளக்கடத்தல்கள் இலங்கை கடற்கரை ஓரமாக எங்கும் தான் நடக்கின்றதென்பது பகிரங்க ரகசியம். அப்படியிருந்தும் தமிழ்ப்பகுதிகளில் மட்டுமே இராணுவக் காவல்களை வைத்து, தமிழ்ப் பொதுமக்களுக்குத் தொடர்ந்து சங்கடம் ஏற்படுத்தி வருவது எக்காரணம் பற்றியும் ஒரு நல்ல அரசாங்கத்துக்கு அழகல்ல தமிழர்மீது பழிவாங்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ, தங்களுக்கு விமோசனமே இல்லையோ என்று இப்பகுதிகளிலுள்ள மக்கள்மனம் கலங்குவதாயின் அதற்குக் காரணமுண்டு.

நாடெங்கும் பொதுமக்கள் கமிட்டிகளை அமைத்து ஆங்காங்கேயுள்ள ஒழுங்கீனங்களைச் சீர்செய்ய புதிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அப்படி ஏற்படுத்தும் மக்கள் கமிட்டிகள், இப்பகுதியில் கள்ளக்குடியேற்றம், கள்ளக்கடத்தல் இவற்றைத் தடுக்கவும், பொதுமக்களுக்கு வீண் உபத்திரவங்கள் ஏற்படாமல் தடுக்கவும உதவக்கூடும்.

சிங்கள சமூகம் திட்டமிட்டுப் பின்னுக்கு தள்ளப்படுகிறதாம்

கண்டி, வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் துறைக்கு மாணவர்களைத்தெரிவு செய்த முறையை விசாரிக்கவேண்டும் என்றும், விசாரணை முடியும்வரை பல்கலைக் கழக அனுமதியை ஒத்திவைக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் கண்டி தர்மராஜாக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும்பொதுக்கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

அஸ்கிரியபீடாதிபதி வண, ஹலியெல பண்டித சுமண தீசநாயக்கதேரோ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வண. லபுடுவெ ஸ்ரீதம்மநாயக்கதேரோபேசுகையில் கூறியதாவது: பெரும்பான்மை மக்கள் கல்வியில் மட்டுமல்ல, வர்த்தகம், வாணிபம் காணிபெறுதல் ஆகிய எல்லாத்துறையிலும் பின்னணியிலேயே இருந்துவருகின்றனர் சிங்கள சமூகம் பொருளாதார ரீதியில் கடந்த காலங்களில் திட்டமிட்டுப் பின்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார சமூக ரீதியில் பெரும்பான்மை இனத்திலுள்ள அங்கத்தவர்கள் சிறுபான்மையாக்கப்பட்டுள்ளனர். 90வீதமுள்ள பெரும்பான்மை மக்கள் 30 வீதம் கூட இத்துறைகளில் இடம்பெறவில்லை.

இறக்குமதி வர்த்தகம் சிறுபான்மை இனத்திடமும் இலங்கையரல்லாதவரிடத்துமேயுள்ளன 60, 70 வீதமான சிறுபான்மையினரும் இலங்கையரல்லதவர்களும் வீடுகட்டும் நிலம், சிறுகைத்தொழில், மற்றும் நாட்டின் முன்னணித் தொழில்களைப் பெற்று நன்மைகளைப்பெற்று வருகின்றனர். 300 ஏக்கர் நிலத்தையுடைய வெள்ளவத்தையில் 37 ஏக்கர் காணியே சிங்கள மக்களிடமுள்ளது.

கல்வித்திட்டம்கூட சிறுபான்மையினர் பயன்படும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளது எல்லா சோஷலிஸ ஜனநாயக நாடுகளிலும், விஞ்ஞானம் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது இலங்கையில் எதிர்மாறாக இருக்கிறது.

கண்டி கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியைச்சேர்ந்த திரு. மகிந்தா ஹெவகே பேசுகையில் கூறியதாவது: சிங்களவர்களைவிட தமிழர் அறிவிற்சிறந்தவர்கள் என்பதில் அர்த்தமில்லை. இவ்விடயம் ஆராய்ச்சியால் நிருபிக்கப்பட்டுள்ளது உதாரணமாக கண்டியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் 27 பேரும், காலி கனிஷ்ட பல்கலைக் கழகத்திலிருந்து 21 பேரும் யாழ்ப்பாணத்திலிருந்து 4 பேருமே சித்தி பெற்றனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பிரதம மந்திரிக்கும் கல்வி அமைச்சருக்கும், மந்திரி சபைக்கும் அனுப்பிவைப்பதென்று முடிவுசெய்யப்பட்டது. இதுசம்பந்தமாக பிரதம மந்திரியை பேட்டிகண்டு நிலைமையை நேரில் விளக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆண்டு விழா

உடுப்பிட்டி, வெள்ளி

சப்பூதா அந்தணந்திடல் இந்து மாமன்றத்தினரின் 3வது ஆண்டு நிறைவுவிழாவும், சைவ மகாநாடும் இம்மாத நடுப்பகுதியில் இரு தினங்கள் சைவ வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாணவனுக்கு சாதகமான தீர்ப்பு

சென்னை, ஆகஸ்ட். 7

திருவையாற்றில் சமஸ்கிருதமும் தமிழும் போதிக்கும் ராஜா கல்லூரி அதிகாரிகள், துரைக்கண்ணன் என்ற மாணவனை நீக்கியதை உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. டி. ராமபிரசாதராவ் ரத்துச் செய்துள்ளார்.

மேற்படி கல்லூரியின் அதிபர் முறை தவறி நடந்ததாக முதல் வருட, மூன்றும் வருட மாணவர்ள் இவ் வருடம் பெப்ரவரியில் வேலை நிறுத்தம் செய்தார்கள். பின்பு உண்ணாவிரதப் பயமுறுத்தலும் வந்தது, அதிபர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் உறுதியளித்ததின் பேரில் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. ஆனால் கலெக்டர் கூறியபடி எதுவும் நடக்கவில்லை. இதன் பின்பு துரைக்கண்ணனும், வேறொரு மாணவனும் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டார்கள் இதையொட்டி தொடரப்பட்ட வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

சாகித்திய மண்டலம்

13 குழுக்களும் 7 ஆகிறது

கோட்டை, வெள்ளி

அகில இலங்கை சாகித்திய மண்டலத்தின் கீழ் இதுகாலவரை 13 ஆக இயங்கி வந்த குழுக்கள் ஏழு குழுக்களாக மாற்றப்பட இருக்கின்றன.

புராதன சிங்கள இலக்கியம், பாளி சமஸ்கிருத இலக்கியம், தற்காலச் சிங்கவம், தமிழ் இலக்கியம், இஸ்லாமிய இலக்கியம், சிறுவர் இலக்கியம், விஞ்ஞான இலக்கியம் ஆகிய ஏழு குழுக்களாக இயங்கும்.

இந்த ஏழுகுழுக்களுக்கும்ஒரு குழுவுக்கு 12பேராக 84பேர் நியமிக்கப்படுவார்கள். இக் குழுவில் ஏழுபேர் சிங்கள

தொழிற்சங்க அமைப்புக்கு வித்திட்டது ஐ. தே. கட்சி

ஆட்சி மன்றத்தில் ஜே. ஆர்.

கோட்டை, வெள்ளி

'தொழிற்சங்கதிருத்த மசோத சிறியதாகவிருந்தாலும் அதன் சக்தி ஓர் அணுகுண்டினுடையது அரசாங்க ஊழியர்களுக்கு தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கான உரிமையை இற்றைக்கு 22 ஆண்டுகளுக்குமுன்னர் அளித்த பெருமை ஐக்கியதேசியக்கட்சிக்கே உரியது'.

ஆட்சிமன்றத்தில் புதன்கிழமையன்று தொழிற்சங்

தாலுக்கும் பணம் வசூலிக்கப்படுமா? இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

ஒவ்வொரு தொழிற்சங்கம் தனது அரசியல் கட்சியின் கொள்கைகளை ஏற்று அதற்கு விசுவாசமாக நடந்துகொள்கிறது. ஆனால் இத் திருத்தமசோதா பல்வேறு தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் சிறுபான்மையினருக்குத் ... தலை விளைவிக்கக்கூடியது.

சுந்தரர் தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன்துறைத்தொகுதிக்கான பொதுத் தேர்தல் நியமனப் பத்திரத்தில் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தின் கையொப்பத்தை திரு செல்வநாயகத்துக்குப் பதிலாக செனட்டர் நடராசா வைத்தார் என்று குற்றஞ்சாட்டி திரு. ஸி சுந்தரலிங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு டயஸ் முன்னிலையில விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாட்சிகளான முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ், பதில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம், சபாரத்தினம் ஆகியோர் நீதிமன்றத்தில் சமூகமளிக்காததால் நீதிபதி வழக்கை செப்டம்பர் மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

திரு. ஸி. சுந்தரலிங்கம் பொலிஸ் பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். அதேபோன்று மீண்டும் பொலிஸ் காவலுடன் காரில் ஏறிச்சென்றார்.

செனட்டர் நடராசா சார்பில் வழக்கறிஞர்கள் அ. அமிர்தலிங்கம், ஆர். என் சிவப்பிரகாசம், வீ. பாலசிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (கு வி.ம

வடமாகாண

சிகை அலங்கரிப்பாளர் முன்னேற்றச் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாண சிகையலங்கரிப்பாளர்முன்னேற்றச்சங்கம் திரு. சி, விசுவலிங்கம் தலைமையில் நேற்று கூடியது. பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன

இக்கூட்டத்தில் பேசிய திரு இராமச்சந்திரன், "இக்கூட்டம் வெறும் சலசலப்பாக இல்லாமல் இனத்தின் பிற்கால நலன்களைக்கருதியும் கருதியும் இப்போதுள்ள அரசாங்கம் பல நன்மைகளைச் செய்யும் இந்த வேளையில் சிகை அலங்கரிப்பாளர் ஒன்று சேர்ந்துஎமது கருத்துக்களையும் தீர்மானங்களையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்போம்" என்றார்

பிரிந்திருந்திருப்த இரு சிகையலங்கார சங்கங்களும் ஒன்று சேர்ந்துள்ளதைப் பலர் பாராட்டிப்பேசினர்.

சங்கக்காரியதரிசி திரு. சிற்றி க நாகலிங்கம் நன்றி

ஜயாறன் எழுதுவது

மாங்குளம் முக்கொலை வழக்கிலே அளிக்கப்பட்ட தீர்ப்பு, இலங்கையிலே நீதி நிர்வாகத்தின் புகழை ஓங்கச் செய்வதாகும் மூன்று தமிழரைக் கொலை செய்ததாக இரு சிங்களவர்மீது குற்றம்சாட்டி வழக்கு நடைபெற்றது

தங்களுக்குச் சிங்களவர்களடங்கிய ஜூரிசபையே வேண்டுமென்று எதிரிகள் கேட்டதற்கிணங்க அவ்விதமே ஜூரிகளும் நியமிக்கப்பட்டனர். விசாரணையும் நடந்தது

வழக்கை விசாரித்த நீதியரசரும் ஒரு சிங்களவரே. எதிரிகள் இருவரும் குற்றவாளிகளென்று ஜூரிசபை கூறிய கருத்தை நீதியரசர் ஏற்று முதல் எதிரிக்கு தூக்குத் தண்டனையும் இரண்டாவது எதிரிக்கு 15 வருட சிறைத்தண்டனையும் விதித்துள்ளார்.

மாங்குளத்திலே தமது பண்ணையில் வேலைசெய்தவர்களுக்கு சம்பளம்கொடுப்பதற்காக ரூ. 5000க்கான காசோலையை மாற்றிவந்த நிலச் சொந்தக்காரரை அங்கு வேலை பார்த்த இரு எதிரிகளும் தாக்கிக் கொன்றதுடன் இதைப் பார்த்துக்கொண்டிருந்த வேறு இருவரையும் அவ்விதமே கொன்றதாக வழக்கு பண ஆசையால் நடந்த முக்கொலைகளாம் இது. அந்தப் பணத்தில் இருநூறுரூபாயை மட்டும் எடுத்து வந்து மற்றதை வீட்டிலேயே பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டாராம் சொந்தக்காரர். இது தெரியாமல் எதிரிகள் இருவரும் பண்ணையாரைத் தாக்கிக் கொன்றபோது இருநூறுரூபாய்கள்மட்டுமே இருந்ததைக் கண்டு அவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும். பின்பு அங்கிருந்து இருவரும் தலைமறைவாகவே, பொலிசார் வேறு ஊரில் அவ்விருவரையும் கண்டுபிடித்து வழக்குத் தொடர்ந்தனர்.

இவ்வழக்கில் எதிரிகளைப் பிடித்து வழக்கில் வென்ற பொலிஸாரையும் பாராட்ட வேண்டும்.

0 0 0

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவுக்கு பெண்கள் கூடியமட்டில் நகைகள் அணியாமல் வர வேண்டுமென்று பொலிஸ் அதிபர் யோசனை கூறியிருக்

பஜனை ஒலியைவிட ஒரு தாயின் பலத்த ஓலமும் அழுகையுமே பலருக்கும் கேட்டது. யாரோ அத்தாய் அணிந்திருந்த நகையை அறுத்துக் கொண்டு போய் விட்டாராம். சுவாமிபார்க்க சந்தோஷமாக வந்த அந்தத்தாய், தன் உயிரினும் மேலாக மதித்த அந்த நகையை இழந்து அலறிக்கொண்டே வீடு திரும்பினர். பாவம்! நகைகளால் உயிருக்கேகூட ஆபத்து ஏற்படுவதையும் கேள்விப்படுகிறோம். ஆகவே இங்கு பொலிஸ் அதிபர் இவ் விஷயமாகக் கூறிய யோசனையின்படி நடப்பது பலவ்தங்களிலும் நல்லது நகை பற்றிய பொய்க் கௌரவங்களை நம் தாய்க்குலம் விட வேண்டிய சமயம் வந்துவிட்டது. இதற்குச் சமூகத்திலுள்ள செல்வந்தர்களே வழிகாட்டவேண்டும்.

நகைகள் போடத்தான் வேண்டுமாயின், போலி நகைகள் போடலாம். கள்வர் பயமோ, உயிருக்குப் பயமோ இன்றி நிம்மதியாக சுவாமிதரிசனம் செய்யலாம். மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்,

0 0 0

'ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்' என்ற பெயருடன் ஒரு சிறிய நூல் அழகாக அச்சிடப்பெற்று கிடைத்துள்ளது. காரை நகரிலேயுள்ள 'ஈழத்துச் சிதம்பரம்' எனப்படும் புகழ் பெற்ற கோயில் எப்படி எழுந்தது என்பதுபற்றிய ஆச்சரியமான விவரங்களையும், பக்தர்களின் கருத்துக்களையெல்லாம் இறைவன் எப்படி வெற்றியுடன் நிறைவேற்றிவைக்கிறார் என்பதையும் எளிய நடையிலே யாரும் விளங்கிக்கொள்ளும்படி ஆசிரியர் புலவர் மணி இளமுருகனார் இப்புராணத்தைப்பாடி இருப்பது மக்களிடையே தெய்வபக்தியையும், தமிழ் அறிவையும் பரப்பக்கூடியதாக இருக்கின்றது. அவரது துணைவியார், பண்டிதைமணி பரமேசுவரி அவர்கள் இதற்கு மேலான உரை எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது சுருக்கம்தான். பெரிய நூல் பெரும் பணச் செலவில் அச்சாகிவருகிறதாம். இது வெற்றியுடன் நிறைவேறவேண்டுமென்றும் இறைவன் கைவிட

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

னரே ஏதேச்சாதிகாரமாக மக்களைத் தாக்குவதாயின், அது சகிக்கமுடியாததாகும். அரசாங்கத்துக்கு இது இழுக்காவதுடன், இதை இப்படியே தடுக்காமல் விட்டுக்கொண்டுபோயின், இராணுவம் கட்டுக்கடங்காமல், அரசாங்கத்துக்கே ஆபத்தாகவும் முடியக்கூடும்.

இராணுவத்தால் இனி பொதுமக்கள் யாரும் தாக்கப்படமாட்டார்கள் என்று இராணுவ அதிகாரிகள் வாக்களித்த மறுநாளே மக்கள் தாக்கப்படுவதாயின், இந்த உறுதிமொழிகளால் என்ன பயன்? இவ் வாக்குறுதி மீறப்பட்டதற்கு இராணுவ அதிகாரிகள் கூறும் சமாதானமென்ன? இனி இவ் கமிட்டிகள், இப்பகுதியில் கள்ளக்குடியேற்றம், கள்ளக்கடத்தல் இவற்றைத் தடுக்கவும், பொதுமக்களுக்கு வீண் உபத்திரவங்கள் ஏற்படாமல் தடுக்கவும உதவக்கூடும். ஆகவே இவ்வித சபைகள் ஏற்பட்ட பின்பாவது, இராணுவத்தை இங்கிருந்து நீக்கிவிட முடியாதா? தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தை வைத்திருக்கத்தான் வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாயின் இதனுல் இங்குள்ள பொது மக்கள் தாக்கப்படாமலும், அவர்களை நிம்மதியாக வாழவுமாவது அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டாமா? இது அரசாங்கத்தின் மேலான கடமையல்லவா?

நிதி அமைச்சரின் எச்சரிக்கை

தெரணியகல, வெள்ளி

"இலங்கை அரசாங்கம், கறுப்புச்சந்தைக்கும் லஞ்ச ஊழல்களுக்கும் எவ்வித பாரபட்சமும் காட்டமாட்டாது. அவர்களைத் தேசியத் துரோகிகளாகவே கருதும் வாழ்க்கைக்கு முக்கியமான உணவுப் பொருட்களில் இலாபம்பெற விரும்பி விலையைக் கூட்டுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்" என நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா, ருவான்வெல கித்தலன்கமுவ வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: "அரசாங்கம், மக்கள் நலனுக்காக விலைவாசிகளைக் குறைத்துள்ளது. விலைவாசிகளைக் கூட்டி விற்கும் வியாபாரிகளுக்கு அரசாங்கம் கடும் தண்டனை விதிக்கும். இலங்கைப் பிரஜை அல்லாதவராக இருந்தால் அவருடைய விசா ரத்துச்செய்யப்படும்"

'பற்றுக்குறையை நீக்குக'

முசலி, வெள்ளி

பாலம்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றுக்குறை காரணமாக பாலம்பிட்டி பெற்றோர் ஆசிரியர் சங்கம் அதிருப்தி அடைந்துள்ளது.

இக்குறையை போக்கும்படி கல்வி இலாகாவை மேற்படி பெற்றோர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது

ஆசிரியருக்குக்கடிதம்

அமைச்சர் கவனிப்பாரா?

குரு வித்தியாலயப் பிரவேசப் பரீட்சையும், 1970 பொதுக்கலைத் தகுதித் தேர்வுப் பரீட்சையும் ஒரே தினத்தில் நடக்கவிருப்பதால். இரு பரீட்சைகளுக்கும் தோற்றவிருக்கும் சில பரீட்சார்த்திகள் என்ன செய்வதென அறியாது திகைக்கிறார்கள் குரு வித்தியாலயப் பிரவேசப்பரீட்சை 10-8-1970, 11-8-1970 ஆகிய இரு தினங்களில் மட்டும் நடைபெறுகின்றபடியால் மேற்குறித்த இரு தினங்களில் நடைபெறவிருக்கும் சர்வகலாசாலை (பேராதனை) பொதுக்கலைத் தகுதித் தேர்வை (வெளி மாணவர்) மாற்றியமைத்து இவ்விரு தினங்களில் நடைபெறும் பாடங்களை வேறொரு தினத்தில் நடைபெற கல்வியமைச்சர் உத்தரவிடுவாரா?

சர்வேஸ்வரன்
வட்டுக்கோட்டை.

......

ஆசிரியருக்குப் பிரியாவிடை

தாவடி, வெள்ளி

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பல வருடங்களாகப் பணிபுரிந்து இளைப்பாறும் ஆசிரியர் திரு. சோமஸ்கந்தருக்குப் பிரியாவிடை விருந்துபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது. அதிபர் திரு சி. க. கந்தசாமி உட்படப் பல ஆசிரியர்களும் இளைப்பாறும் ஆசிரியரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

ஆண்டுகளுக்குமுன்னர் அளித்த பெருமை ஐக்கியதேசியக்கட்சிக்கே உரியது'.

ஆட்சிமன்றத்தில் புதன் கிழமையன்று தொழிற்சங்கத் திருத்தமசோதா நிறைவேற்றப்பட்டபோது பேசுகையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜெ. ஆர். ஜயவர்த்தனு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

22 வருடங்களுக்கு முன்னர் அப்பொழுது தொழில் அமைச்சராகவிருந்த திரு ரி. பி. ஜயா தொழிற்சங்கசட்டத்தைக் கொண்டுவந்தார் இந்தமசோதாவே அரசாங்க ஊழியர்களுக்கு முதன்முதலாக தொழிற்சங்கங்களை அமைக்க வழிவகுத்தது 1948-ம் ஆண்டுக்கு முன்னர் இத்தகைய ஒரு சலுகை அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கவில்லை. அந்தநேரத்தில் அரசாங்க காரியதரிசியின் உத்தரவின்றி ஒரு கூட்டம் கூடநடாத்தவியலாது ஆனுல் திரு. ஜயாவே அவர்களுக்கு சுதந்திரமளித்தார் எனலாம். சுருங்கக்கூறின் ஐக்கியதேசியக்கட்சியே இந்த சுதந்திரத்தை ஊழியர்களுக்கு தழங்கியது. அச்சட்டத்தில் இருந்த கட்டுப்பாடுகள் சிலஇத்திருத்தமசோதாவில் நீக்கப்பட்டுள்ளன இதற்கு முன்னர் தற்போது ஆதரிப்பவர்கள்எதிர்பவர்களாகவிருந்தனர். 22 வருடங்களுக்கு முன்னர் நிலைமை இன்றுபோல் இல்லை. ஆதலால் அவர்கள் இன்று ஆதரவு அளித்துள்ளனர். அரசியல் நிதி, அரசியல் உரிமைகள் குறித்து 1948-ம் ஆண்டு நானும் திரு. கெனமனும் மிகக் காரசாரமாக வாக்குவாதப்பட்டோம்.

நடைமுறையிலுள்ள சட்டம் அரசாங்க ஊழியர்களுக்கு விடுதலையளித்துள்ளது. நாங்கள் முன்னர் விதித்த 3 கட்டுப்பாடுகளை தற்போது அரசாங்கம் நீக்கியுள்ளது. அரசியல் நிதி திரட்ட அரசாங்கம் உரிமையளித்துள்ளது' ஒரு சங்கம் அரசியல் நிதி திரட்டும்போது அதை என்ன மாதிரிப் பின்னர் பிரித்துக் கொடுக்கவேண்டும்? பெரும்பான்மையினரின் அரசியல் கருத்துக்களுக்கிணங்க பிரித்துக் கொடுக்கப்படுமா? வேறுபட்ட அரசியல்கொள்கைகள் உடையவர்கள் இருப்பதால் இத்தகைய கேள்வியொன்று நிச்சயமாக எழலாம்.

இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தத்தினுல் மற்றுமொரு கஷ்டநிலையுமுள்ளது, ஹர்த்

இத் திருத்தமசோதா பல்வேறு தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் சிறுபான்மையினருக்கு கெடுதலை விளைவிக்கக்கூடியது.

ஐக்கியதேசிய அரசாங்கம் தொழிற்சங்கங்களிடையே வேறுபாடு காட்டி அநேக அரசாங்க ஊழியர்கள் பலரைக் குற்றவாளியாக்கியுள்ளது எனச் சிலர் எம்மீது குற்றம்சாட்டியுள்ளனர்.

ஆனுல்இந்தக் குற்றச்சாட்டுகள் ஒன்ருவது கண்டுபிடிக்கபடவில்லை. தற்போதைய அரசாங்கம் அநேக இ. போ. ச. தொழிற்சங்கத் தலைவர்களை குற்றவாளிகளாக்கி இடமாற்றியுள்ளதையும் அவர்களின் பெயர்களையும் நான் உங்களுக்குப்பட்டியலாகத் தருகிறேன் இவ்வாறு இடமாற்றப்பட்டவர்கள் யாவரும் தொழிற்சங்கங்களின் தலைவர்களாவர் நாங்கள் விவாதிக்கும் இந்த சட்டத்துக்கு முரண்பாடான இத்தகைய இடமாற்றத்தை அரசாங்கம் ரத்துச் செய்தல்வேண்டும். ஐ தே. கட்சி அரசாங்கத்தின் பிழைகளுக்காக குடும்பங்களோடுஉள்ள இந்த ஊழியர்களை யழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்கு அனுப்பக்கூடாது. வேண்டுமானுல் என்னை நீங்கள் வவனியாவுக்கு அனுப்புங்கள். ஒன்றுமறியாத அந்த மக்களை அனுப்பாதீர்கள்.

இந்த அரசாங்கம் மக்கள் அரசாங்கமானுல் எல்லாமக்களிடமும் நீதியாக நடந்து கொள்ளவேண்டும்.

ஜவுளிக் கூட்டுத்தாபன அதிபர்களின் கணக்குகளையும் கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்க சமர்ப்பித்தபோது ஜவுளிக் கூட்டுத்தாபனம் குறித்து நிக்கவரட்டிய எம் பி திரு முதியான்சே தென்னக்கோன் உரையாற்றினார்.

அவர் பேசுகையில் கூறியதாவது: 'ஜவுளிக்கூட்டுஸ்தாபனத்தால் அரசாங்கத்துக்கு பெருநஷ்டமாகும். ஜவுளிக் கூட்டுஸ்தாபனம் மக்களுக்குத் தேவையான துணிகளை உற்பத்திசெய்யவில்லை. ஜவுளித் தொழில் குடிசைக் கைத்தொழிலாக்கப்படவேண்டும். அப்பொழுது தான் கிராமப்புறமக்கள்நன்மையடைவார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும்.

மேலும் ஜவுளிக்கூட்டுத்தாபன நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறவில்லை. கூட்டுத்தாபன அதிகாரிகளின் நடவடிக்கைகளை கவனிக்க ஒரு ரேயல் கமிஷனை அரசாங்கம் நியமிக்க வேண்டுமென வற்புறுத்தினுர்.

கியம் ஆகிய ஏழு குழுக்களாக இயங்கும்.

இந்தஏழுகுழுக்களுக்கும்ஒரு குழுவுக்கு 12பேராக 84பேர் நியமிக்கப்படுவார்கள். இக்குழுவில் ஏழுபேர் சிங்களவர், நான்கு தமிழர், ஒரு முஸ்லிம் என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கம் வகிப்பர்.

......

விசேஷ பயிற்சிக்குச் சென்றார்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு என் மாணிக்கநடராசா நிர்வாகத்துறையில் விசேட பயிற்சி பெறுவதற்காகக் கொழும்புசென்றுள்ளார். இவர் இரண்டு மாதம் கொழும்பில் பயிற்சி பெறும்வரை திரு. எஸ். நடராசா வலி-மேற்கு காரியாதிகாரியாகக் கடமையாற்றுவார்.

சிகையலங்கார சங்கங்களும் ஒன்று சேர்ந்துள்ளதைப் பலர் பாராட்டிப்பேசினர்.

சங்கக்காரியதரிசி திரு சிற்றி க நாகலிங்கம் நன்றி தெரிவிக்கையில், "இன்றுள்ள சூழ்நிலையில் சங்கத்தை முன்னேற்றமான முறையில் நடத்துவதற்கு எமது சமூகமும் தொழிலாளர்களும் ஒத்துழைக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

கருத்தரங்கு

மாவிட்டபுரம், வெள்ளி

சுன்ணுகம் பட்டினசபையின் ஆதரவில் நடைபெற்றுவரும் கருத்தரங்கில் இம்மாதம் 9ம் திகதி வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ தியாகராசா 'தமிழர் நிலையும் அரசியல் நிர்ணய சபையும்' என்பது பற்றி உரையாற்றுவார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவுக்கு பெண்கள் கூடியமட்டில் நகைகள் அணியாமல் வர வேண்டுமென்று பொலிஸ் அதிபர் யோசனை கூறியிருக்கிறார். நகைகள் இல்லாவிட்டாலும் இரவலாவது வாங்கிப் போட்டுக் கொண்டு திருவிழாவுக்குப் பல பெண்கள் வருவதுண்டு. நகையில்லாத காரணத்தால் சில பெண்கள் திருவிழாவையே வந்து பார்க்காமல் இருப்பதுண்டு. நகைகள் இல்லாவிட்டால் தங்களுக்கு மதிப்பில்லை என்றும் காதிலும் கழுத்திலும் கையிலும் நகைகள் இருந்தாலே பிறர் மதிப்பரென்றும் பெண்களில் பலர் நினைப்பதுண்டு

இதனுல் கள்வர்களுக்கு திருவிழாக்கள் நல்ல வாய்ப்பாகும். ஒருரிலே தேர்த்திருவிழா நடைபெற்றது பஜனைகளும் நடந்தன. ஆனுல்

பெரிய நூல் பெரும்பணச் செலவில் அச்சாகிவருகிறதாம். இது வெற்றியுடன் நிறைவேறவேண்டுமென்றும் இறைவன் கைவிடமாட்டானென்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாயும் இதில் பொறுப்பேற்றுள்ள சிவத்திரு வைத்தீஸ்வரக்குருக்கள் எழுதுகின்றார். காரைநகரைச் சேர்ந்த செல்வந்தர்கள் பணம்வைத்தால், அந்த ஊரின் புகழை ஓங்கச் செய்யும் இப்பெரிய நூல் வெகு சீக்கிரத்தில் வெளிவர முடியும்.

0 0 0

காக்கக் கடவிய நீ
காவாதிருந்தக்கால்.
ஆர்க்குப் பரமாம்
அறுமுகவா- பூக்கும்
கடம்பா முருகா
கதிர் வலா நல்ல,
இடங்காண் இரங்காய்
இனி.

வேலணை அம்மன் கோயில் ஆலயப்பிரவேசம்

"வேலணை கிழக்கு முத்துமாரி அம்மன் கோயில், ஹரிஜனங்களுக்கு, திறந்துவிடப்படதை எங்கள் ஊர் மக்கள் எல்லோரும் முழு மனதுடன் ஆதரித்தார்கள் கோயில் பரிபாலனசபையின் தலைவர் என்ற முறையில் இச்செய்தியை மகிழ்ச்சியுடன் வெளியிடவேண்டியுள்ளது" என்று வேலணை கிழக்கு, முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலனசபைத் தலைவர் திரு. க. தில்லையம்பலம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுவதாவது: "கோயில் பரிபாலன சபையினர் ஏகமனதாக ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தனர். பரிபாலனசபை ஆலயத்தைத் திறந்துவிடவேண்டும் என்று முடிவுசெய்த பின், திருவிழாச் செய்பவர்களையும் அழைத்து அவர்களுக்கும் இந்த முடிவைத் தெரிவித்தோம். அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்,

தீவுப் பகுதிப் பா. உ திரு. கா பொ. இரத்தினம், ஊர்காவற்றுறைக் காரியாதிகாரி திரு சொ. விநாயகலிங்கம், வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. க சதாசிவம், கோயில் பரிபாலன சபையின் முன்னைநாள் தலைவர் திரு சி ஆராசரத்தினம் முதலியவர்கள் இந்த ஆலயப் பிரவேச விழாவில் கலந்துகொள்ள வந்தார்கள் அவர்கள் வந்த பொழுது எவ்விடத்திலேனும் கறுத்தக் கொடி காட்டப்படவில்லை

பொதுமக்கள் திரண்டு வந்திருந்து இந்தப் புனித நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள், இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு கோயிலுக்கண்மையிலுள்ள எல்லா ஹரிஜனங்களையும் நாங்கள் அழைத்தோம் நாங்கள் அழைத்தவர்கள் எல்லோரும் சமுகம் கொடுத்தார்கள். வேலணை மேற்கிலுள்ள ஹரிஜனங்களில் சிலர் தங்களை அழைக்கவில்லை எனவே தாங்கள் கலந்துகொள்ளவில்லையெனக் கூறினுர்கள் இந்நிகழ்ச்சி நடைபெற்று முடிந்த பின்னர் ஒரே ஒருவர் மட்டும ஒரு கறுப்புக் கொடியை எங்கோ தூரத்தில் நின்று பிடித்தாரென்று பின்னர் அறிந்தோம்

இந்தக் கோயில் பரிபாலன சபையில் சில கருத்து வேறுபாடுகளின் காரணத்தால் சில பரிபாலன சபை உறுப்பினர்கள், பரிபாலன சபைக் கூட்டங்களை பகிஷ்கரித்துள்ளனர். ஆனுல் அவர்கள் எவரேனும், இந்த ஆலயப் பிரவேசத்தை எதிர்க்கவில்லை. அவர்கள் மதித்து ஒத்துழைப்பு நல்கும் முன்னைநாள் பரிபாலன சபைத்தலைவர் திரு சி இராசரெத்தினம் இந்நிகழ்ச்சியில் கலந்து சொற்பொழிவாற்றி பரிபாலன சபையில் பகிஷ்கரித்த உறுப்பினர்களின் ஆதரவை இந்த நிகழ்ச்சிக்கு தந்துள்ளார்.

கதிர்காமயாத்திரை

5 நாட்கள் காட்டில் தவித்த வயோதிபமாது

மட்டுவில், வெள்ளி

கால்நடையாக கதிர்காம யாத்திரைக்குச் சென்றிருந்த ஒரு பெண் வழி தடுமாறி நடுக்காட்டினுள் சென்று சுமார் ஐந்து நாட்கள் நடுக்காட்டில் அலைந்து திரிந்தபின்னர் அவ்வழியே மரம்வெட்ட வந்தவர்களால் காப்பாற்றப்பட்டு, வீடுவந்து சேர்ந்துள்ளார்.

கல்வயலைச் சேர்ந்த தம்பு இலட்சுமி என்ற இந்த 65 வயது மாதுவே இவ்வித அனுபவத்துக்குள்ளானவர். இவர் நடுக்காட்டில் வீரைப் பழங்களையும், பாலைப் பழங்களையும் சாப்பிட்டாராம் குடிக்கத் தண்ணீர் இன்றி அவலப்பட்டாராம். காட்டில் பயங்கர யானைக்கூட்டங்களையும் கண்டு பற்றைகளுக்குள் ஒளித்திருந்தாராம். மரம் வெட்டுவதற்குவந்த சிலர் இவருக்கு உண்ண உணவு கொடுத்துப் பாதுகாத்து கதிர்காமம் ஆலயத்தில் சேர்ப்பித்தனராம். சில தினங்களுக்குமுன்னர் அவர் ஊர் திரும்பினாராம்.

விருந்துபசாரம்

தாவடி, வெள்ளி

அரசாங்க இலாகாக்களிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் சாம்பியனான தபால்கோஷ்டியினருக்கு கொக்குவில் தபால் நிலைய அதிபர் திரு சிவானந்தனுல் விருந்துபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது.

சிறுபான்மை ஆசிரியர் வேண்டும்

மாவிட்டபுரம், வெள்ளி

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் பயிலும் சிறுபான்மை தமிழ் பிள்ளைகளின் நலன்கருதி அங்கு ஒரு சிறுபான்மைதமிழ் ஆசிரியரை நியமிக்குக என்று அரசாங்கத்திடம் கோரும் தீர்மானமொன்று இணுவில் கம்யூனிஷ்ட் கட்சி வாலிப கிளையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்தில நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு

தனியார் வைத்தியசாலையாகவுள்ள இணுவில் கர்ப்பிணிகள் வைத்தியசாலையை அரசு பொறுப்பேற்றுஅதன் உடமைகளையும் பெற்று ஏழை மக்களுக்கு உதவ வேண்டும். இணுவில் தபால் நிலையத்தை தரம் உயர்த்த வேண்டும்.

......

கோவிலில் திருட்டு

கொழும்புத்துறை, வெள்ளி

நாயன்மார்க்கட்டு இராசேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் உட்சென்று அங்கிருந்த விளக்குகள் உட்பட பல விலையுயர்ந்த பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக கோவில் பரிபாலகர் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org